**விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை: திரு.இரா.மங்களராமசுப்ரமணியன், எம்.எஸ்சி., பி.எட்.,**

ந.க.அ6/24118/2017 நாள் : 03.02.2022.

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம் - வட்டாட்சியர் அலுவலகம் - அலுவலக உதவியாளர் - திரு.ரா.விக்கிரமாதித்தன் - பணியில் இருக்கும் போது 05.06.2017-இல் காலமானது - அன்னார் மகள் செல்வி.வி.லதா - கருணை அடிப்படையில் - பணிநியமனம் வழங்கப்பட்டது - 03.01.2019 மு.ப. பணியேற்பு செய்து பணிபுரிந்து வருவது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:-
1. திருமதி.வி.தங்கத்தாய் க/பெ.(லேட்)ரா.விக்கிரமாதித்தன் என்பவரது மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறைதீர் நாள் மனு, நாள்.07.08.2017
2. செல்வி.லதா த/பெ.(லேட்)ரா.விக்கிரமாதித்தன் என்பவரது மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறைதீர் மனு, நாள்.07.08.2017
3. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.அ6/தப.318/2017, நாள்:02.01.2019
4. விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.அ6/1234/2018, நாள்:02.01.2019.
5. விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண். நக.அ6/த.ப.318/2017, நாள். 26.09.2019 மற்றும் 01.09.2020.
6. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 26.02.2021.
7. சென்னை, அரசு முதன்மைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கடிதம் எண்.9694/பணி9(2)/2021-3, நாள். 28.06.2021.
8. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடிதம் எண். ஆ.கு.3/ 18395/2020, நாள். 01.11.2021.

((()))

**ஆணை:-**

விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், விருதுநகர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த போது, கடந்த 05.06.2017 ஆம் தேதியன்று காலமான திரு.ரா.விக்கிரமாதித்தண் என்பவரின் என்பவரின் மகள் செல்வி.வி.லதா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழக்கக் கோரி வரையறுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் 07.08.2017 அன்று (2 மாதம் 2 நாட்களுக்குள்) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பார்வை 1 மற்றும் 2-இல் கண்டுள்ளவாறு விண்ணப்பித்துள்ளனர்.

2) தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, பணிநியமனம் செய்யப்பட்டுள்ளது. பார்வை 4-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தனியருக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் வழங்கப்பட்டு, 03.01.2019 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.



Scanned with CamScanner

3) தனியர் திருமதி.வி.லதா என்பவர் பணியேற்பு செய்த நாளான 03.01.2019 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்ய அரசிடமிருந்து ஆணை பெற்றுத்தரக் கேட்டு, சென்னை கூடுதல் தலைமைச் செயலர் /வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு பார்வை 5-இல் காணும் இவ்வலுவலகக் கடிதங்களின் வழி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது.

4) பார்வை 8-இல் காணும் சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் பத்தி 5-இல், பார்வை 6-இல் காணும் அரசாணை மற்றும் பார்வை 7-இல் காணும் அரசுக் கடிதத்தில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் (Relaxation of Rules) அரசாணைகளுக்கு விலக்கும் (Exemption of Government Orders) தேவைப்படாத பணியாளர்களுக்கு கிராம நிருவாக அலுவலருக்கு பணிநியமன அலுவலர், கோட்டாட்சியராகவும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு பணிநியமன அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) என்ற நிலையில், கூடுதல் அதிகாரம் பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர், அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்யலாம் என நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

5) அதனடிப்படையில், பார்வை 6, 7, 8-இல் காணும் அரசாணை மற்றும் அரசுக் கடிதங்களின்படி, விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.வி.லதா என்பவருக்கு எவ்வித விதித்தளர்வும் (Relaxation of Rules) அரசாணைகளுக்கு விலக்கும் (Exemption of Government Orders) தேவைப்படாத காரணத்தினால் தனியரது பணியை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 03.01.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஒம்.)இரா.மங்களராமசுப்ரமணியன்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
விருதுநகர்.

/ஆணைப்படி/

மாவட்ட வருவாய் அலுவலருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது)
விருதுநகர்.

4/2/22

பெறுநர்:
திருமதி.வி.லதா,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர்.
நகல் :
கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5
நகல்: மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(கணக்கு), விருதுநகர்.
நகல் : அ6 இருப்புக்கோப்பிற்கு

Scanned with CamScanner